பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 13 சனிக்கிழமை 28.12.2024 கதிர் 051

# தமிழரின் உரிமைகளை காக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து

நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள். தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று சிறீ லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவரிடம் புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்துக் கேள்வி எழுப்பியபோது இதனைத் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்தாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளைதுரிதப்படுத்துவதாகஆளும்தரப்புக் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. பல தசாப்தகாலமாக புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிப் பேசப்படுகிறது. இருப்பினும் எந்த ஆளும்தரப்பும் புதிய அரசியலமைப்பினை உருவாக்கவில்லை.

முதலாளித்துவ தரப்பினர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

போர் முடிவடைந்தவுடன் அரசமைப்பின் ஊடாகதமிழ்மக்களுக்குதீர்வுவழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்தார். ஆனால்போர்வெற்றியை2010ஆம்ஆண்டு தேர்தலின் வெற்றிக்காக பயன்படுத்தினாரே தவிர நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வ ☞ 2



## அரிசி தட்டுப்பாட்டை தீர்ப்பதில் ஆளும்தரப்பு தோற்றுவிட்டது

### பொதுஜன பெரமுன சாட்டை

அரிசி தட்டுப்பாட்டுக்கு பேச்சளவில் மட்டுமே ஆளும்தரப்பு தீர்வைமுன்வைக்கிறது. சந்தையில்நிலவும்அரிசிதட்டுப்பாட்டைக் கவனத்திற் கொள்ளவில்லை. அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் ☞ 8

## இது ரகசியம் அல்ல!

இலங்கைதமிழ்அரசுக்கட்சியின் மத்திய செயற்குழுகூட்டம் இன்று வவுனியாவில்காலைபத்துமணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய கூட்டத்தில் மாவையின் தலைமை தொடர்பில் கட்சி ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கான ☞ 2

## சீன அரசின் ஒத்துழைப்புக்கு சுகாதார அமைச்சர் பாராட்டு

இலங்கையின் சுகாதாரம், பொருளாதாரம், கல்வி மற்றும் சமூக விவகாரங்களைமேம்படுத்துவதற்காகசீன அரசுநீண்டகாலமாகதமதுஒத்துழைப்பை வழங்கி வருவது பாராட்டத்தக்க விடயமாகும் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ள சீன கடற்படைக்கு சொந்தமான 'பீஸ் ஆர்க்' என்ற மருத்துவமனை கப்பலுக்கு வியாழக்கிழமை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ வருகை தந்திருந்தார். அங்குநடைபெற்றவிருந்துபசாரத்தில் ☞ 8

## ஹிக்கடுவ, புத்தளம் பகுதிகளில் கடலில் மூழ்கிய இருவர் இறப்பு

ஹிக்கடுவ கடலில் நீராடிக் கொண்டிருந்த ரஷ்ய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திராணகம கடற்பகுதியில் வியாழக் கிழமை காலை ரஷ்ய சுற்றுலாவிகள் குழு ஒன்று நீராடிக்கொண்டிருந்தது. நண்பர்கள் எல்லோரும் கரையேறிவிட ஒருவர் மட்டும் தொடர்ந்து நீராடிக் கொண்டிருந்துள்ளார். திடீரென அவர் கடல் அலைகளால் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்தார்என்றுஹிக்கடுவபொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 33 வயதான ரஷ்யயர் ஒருவரே உயிரிழந்தார்.

இதேவேளை, புத்தளம் மஹவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பயிலிகம பகுதியில் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். இவர் ☞ 2

## விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்திலேயே கோட்டாவின் அழிவும் தொடங்கியது

### ஆளும்தரப்பை எச்சரிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி

இந்த ஆளும்தரப்பும் தற்போது விவசாயிகளின் முழு அதிருப்திக்கு உள்ளாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அழிவும் விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்திலேயே தொடங்கியது. எனவே கடந்த காலங்களை நினைவில் கொண்டு ஆளும்தரப்பு செயற்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் வியாழக்கிழமைஇடம்பெற்றகலந்துரையாடன ☞ 2

## 72ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இதுவரை இறக்குமதி

அரிசி இறக்குதி செய்வதற்கு அனுமதி அளித்ததன் பின்னர் நேற்று வரை 72ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சுங்கத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதியான அரிசிகள் அனைத்தும் பரிசோதனை முடித்து துறைமுகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டன என்று சுங்க திணைக்கள ஊடக பேச்சாளரும் சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இறக்குதி செய்யப்பட்டுள்ள 72ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியில் 32ஆயிரம் மெற்றிக் தொன் ☞ 8

## இந்தியா 13 பற்றி இனிமேல் பேசாதுவிட்டால் மகிழ்வேன்

### கஜேந்திரகுமார் தெரிவிப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இனிமேல் பேசாதுவிட்டால் அதனால் பெருமளவுக்கு மகிழ்ச்சியடைவேன் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்தலைவரும்தமிழ்காங்கிரஸின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தனது 'எக்ஸ்' பக்கத்தில் அவர் இந்தக் கருத்தைப் பகிர்ந்துள்ளார். அண்மையில் இலங்கை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க இந்தியா சென்றிருந்தபோது, இலங்கையின் பிரச்சினை குறித்துப் பேசிய இந்தியப் பிரதமர் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து நேரடியாக எதுவும் குறிப்பிடவில்லை. இலங்கையின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்என்று தெரிவித்தாரேதவிர, வழக்கமாக ☞ 8

## 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தும் உறுதிமொழியை பெற்றவர் மன்மோகன்

### தமிழ் அரசுக் கட்சி பேச்சாளர் சுமந்திரன் இரங்கல்

இந்திப் பிரதமராக மன்மோகன் சிங் இருந்த காலத்தில், இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து கட்டியெழுப்பி அர்த்தமுள்ளஅதிகாரப்பகிர்வு முறைஏற்படுத்தப்படும்என்ற வாக்குறுதியைஇலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடமிருந்து பெற்றிருந்தார் என்று தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர், மன்மோகன் சிங்கின்மறைவுக்குஇரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இதனைத்தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

முன்னாள் இந்தியப் பிரதமர்கலாநிதிமன்மோகன் சிங்கின் (வயது 92) ☞ 2

## இந்திய மீனவர் பிரச்சினை குறித்த மனிதாபிமான நடவடிக்கை என்ன?

### அமைச்சர் சந்திரசேகரன் பதிலளிப்பு

இந்திய மீனவர்கள் பிரச்சினைகுறித்தஇலங்கை இந்தியஅரசுகளுக்குஇடையி லான பேச்சுக்கள் நிறைவ டைந்துவிட்டன. தற்போது இ-ருநாடுகளின்கடற்றொழில் அமைச்சுக்களுக்கும் இடையில் தொழிநுட்ப பிரச்சினைகள் குறித்து நடக்கும் கலந்துரையாடல் தொடரும். இதுவே எமது மனிதாபிமான ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

# வேட்பாளர் கல்வித் தகுதி தரவுகளை கட்டாயமாக்க பொறிமுறை தேவை

## தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்து

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் ஒவ்வொரு வேட்பாளர்களும் தமது கல்வித்தகுதி குறித்த உண்மையான தரவுகளைத் தேர்தல் ஆணையத்திடம் வழங்குவதை கட்டாயமாக்கும் பொறிமுறை ஒன்றை உருவாக்கும்படி தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் மற்றும் பல பொது அமைப்புகளும் தேர்தல் ஆணைய தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

முன்னாள் சபாநாயகர் சப்புமல் ரன்வலவின் 'கலாநிதி' பட்டம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து அவர் பதவிவிலகியிருந்தார். தனது கல்வித்தகுதியை நிரூபிக்கக்கூடிய ஆதாரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்க முடியாத காரணத்தால் தான் பதவி விலகுகிறார் என்று அவர் அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் கல்வித் தகமை தொடர்பிலும் சர்ச்சைகள் எழுப்பப்படுகின்றன.

இதனை அடுத்தே வேட்பாளர்களின் கல்வித் தகைமை வெளிப்படுத்தப்படுவதைக் கட்டாயமாக்கும் பொறிமுறை அவசியம்என்றுவலியுறுத்தப்படுகின்றது. சபாநாயகருக்கு ஏற்பட்ட நிலமை எதிர்காலத்தில் மீண்டும் ஏற்படாமல் தடுக்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று 'பவ்ரல்' அமைப்பின்நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். கல்வி மற்றும் இதர தகுதிகள் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதில் வாக்காளர்களுக்குப் பெரிதும் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின்ஊடாக இந்த முறையை நடைமுறைப்படுத்த முடியாவிட்டால், அரசியல் கட்சிகள் இணையத்தின் ஊடாக இதனை நடைமுறைப்படுத்த முடியும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## இனி இது .....

வாக்களிப்பு நிகழ்ச்சி நிரலில் முதலில் இடம்பெற்றுள்ளது. ஆனால் இந்தக் கூட்டத்திற்கு மாவை வரமாட்டார் என்று தகவல்கள் கூறுகின்றன.

உடல் நலக்குறைவு காரணமாகவே இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதை அவர் தவிர்ப்பார் என்று நேற்றிரவு கூறப்பட்டது. ஆனால், மத்திய செயற்குழுவில் அவருக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்த பின்னரே அவர் கூட்டத்திற்கு வருவதில்லை என்கிற முடிவை எடுத்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் 21 பேரின் ஒப்புதலோடு மாவையருக்கு ஒரு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதில், மாவையரின்பதவி விலகல் தொடர்பில் அவர் முன்னர் வழங்கிய கடிதத்தை ஏற்றுக்கொண்டு, கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தாமல் விலகும்படி வலியுறுத்தப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் நேரடியாக 18 பேர் கையொப்பமிட்டிருந்தனர். ஏனைய -மூவர் வேறு வழிகளில் அந்தக் கடிதத்துக்கான தமது இணக்கப்பாட்டை மாவையருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

கட்சியின்நாடாளுமன்றக்குழுத்தலைவர் சிறீதரன் நேற்று அவரை நேரில் சந்தித்து சுகநலம் விசாரித்தார் என்றும் தெரிகிறது. மாவையருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதாலேயே இந்தச் சந்திப்பு நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இன்றைய கூட்டத்தின் தொடக்கத்திலேயே மாவையின் தலைமை தொடர்பில் நிலவும் குழப்பத்திற்கு ஒரு முடிவு எடுப்பதற்கான வாக்களிப்பு இடம்பெறும் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, மாவையின்பதவிவிலகல்கடிதத்தை ஏற்றுக்கொண்டு மேலதிக நடவடிக்கைகளில் தான் ஈடுபடப்போகின்றார் என்று கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் விடுத்த அறிவிப்பை கட்சியின் மத்திய செயற்குழு ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதன் மீதே வாக்கெடுப்பு நடத்தப்பட இருக்கின்றது.

இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதனை மாவையின் ஆதரவாளர்களாகக் காட்டிக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சிறிநேசன் மற்றும் மருத்துவர் சிவமோகன் உள்ளிட்ட சிலர் எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த கூட்டத்தைப் போன்றுமீண்டும்குழப்பம்விளைவிக்கக்கூடும் என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது. அதனாலேயே மத்திய செயற்குழுவில் மாவைக்கு எதிரான முடிவுக்கேஆதரவுஎன்பதைத்தெளிவுபடுத்தும் வகையில்21பேரின்இணக்கத்துடன்அவருக்கு நேற்றுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழுவில் 41பேர் உள்ளனர். அவர்களில் இப்போது செயற்படு நிலையில் 36 பேர் வரையிலானோரே இருக்கின்றனர். நாடளா-மன்ற உறுப்பினர் குகதாசன் போன்ற மாவைக்கு ஆதரவான ஒருசிலர் கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள். குகதாசன் கனடாவில் இருக்கின்றார். மற்றவர்கள் மத்திய குழுக் கூட்டத்தில் அக்கறைகாட்டாதவர்கள். இதனால் பெரும்பான்மை மாவைக்கு எதிராகவே இருக்கும் என்பது முடிந்த முடிவாகிவிட்டது.

இன்றைய கூட்டத்துக்கு மாவையர் வராத பட்சத்தில்அவர்தொடர்பானவாக்கெடுப்புஇன்றி அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக எடுக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கட்சியின் சில வட்டாரங்கள் தெரிவித்தன. மாவையருக்குப் பதிலாக கட்சியின் நீண்டகால உறுப்பினரான நிர்வாகச் செயலாளர் குலநாயகத்தை தலைமைப் பதவிப் போட்டியில் நிறுத்துவது குறித்து மாவையரின் ஆதரவாளர்களுக்குள் ஆராயப்பட்டிருப்பதால் மாவையர் விடயத்தில் அவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராகி விட்டார்கள் என்பது புலனாகின்றது என்று அந்தத் தரப்புக்கள் தெரிவித்தன.

இந்தப்பிரச்சினைகூட்டத்தின்தொடக்கத்தில் சுமுகமாகமுடிந்தால், அனேகமாகவடமாகாண அவைத் தலைவரும் கட்சியின் மூத்த தலைவருமானசிவஞானத்தின்தலைமையில் கூட்டம் தொடர்ந்து இடம்பெறும். பொதுத் தேர்தலில் கட்சிக்கு வடக்கில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் அடுத்து வரவுள்ள தேர்தல்களுக்கான தயார்ப்படுத்தல்கள் என்பன தொடர்பிலும் ஆராயப்படும்.

.........................................

வழக்குகளால் காணாமற்போயிருக்கும் சுதந்திரக் கட்சி உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான கூட்டணியை அமைப்பதில் ஆர்வம் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. அதுவும்தமதுதலைமையில் ஒரு புதிய கூட்டணியைத் தொடங்க உள்ளதாகவும் அதற்கான பேச்சுக்கள் நடத்தப்படுவதாகவும் அறிவித்திருக்கும் அதன் தற்றுணிபை வியக்காமல் இருக்க முடியவில்லை

விரைவில் இந்தப் புதிய கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார். கொழும்பிலுள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடந்த கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பல தேர்தல்களுக்கு முன்னரே சிறீலங்கா சுதந்திரக் கட்சி காணாமற்போய்விட்டது. அந்தக்கட்சியிலிருந்து

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காண்பதற்குப் பயன்படுத்தவில்லை.

அனைத்துஇனமக்களும்ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய அரசமைப்பினை உருவாக்கி இந்த நாட்டின் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச நினைத்திருந்தால் 2010 ஆம் ஆண்டுகாலப்பகுதியிலேயேபுதியஅரசமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும். ஒரு தரப்பினரது தவறானஆலோசனைகளால்புதியஅரசமைப்பு குறித்து அவர் அக்கறை கொள்ளவில்லை.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இருப்பினும் அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனஅதற்குகடும்எதிர்ப்பைவெளிப்படுத்தி இனவாத அடிப்படையில் செயற்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ச புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்துப் பேச்சளவில்கூட கவனம் செலுத்தவில்லை. தமிழர்களுக்குஎதிராககுறிப்பாகவடக்குமற்றும் கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் செயற்பட்டார்.

இவ்வாறான இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த ஆளும்தரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்டேன். 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி நாட்டு மக்கள் மத்தியில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது.

இடைக்கால ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவை புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து கட்சித்தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். அப்போது நானும் சென்றிருந்தேன். புதிய அரசமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும், தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்க வேண்டும் என்று ரணில் குறிப்பிட்டார். அப்போது சமஷ்டி முறைமை தொடர்பில் கேள்வியெழுப்பிய போது சமஷ்டி முறைமையைத் தான் எதிர்க்கிறார் என்று குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பாரம்பரியமான அரசியல் முறைமைக்கு முடிவுக் கட்டியுள்ளது. புதிய அரசமைப்பினை உருவாக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார். நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்.

தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே கடந்த காலத் தவறுகள் புதிய அரசமைப்பின் ஊடாகத் திருத்தியமைக்கப்படவேண்டும். அப்போதுதான் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியும் என்றார்.

## விவசாயிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு என்ன செய்துகொண்டிருக்கின்றது என்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி மக்களுக்கு பட்டினியில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அரிசித்தட்டுப்பாட்டுக்குஇன்னும் தீர்வு வழங்கப்படவில்லை. ஏற்கனவே சீரற்ற காலநிலையால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இனிவரும் போகங்களுக்கான உரத்தை வழங்குவதற்கும் ஆளும்தரப்பு முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

விவசாயிகள், நுகர்வோர் என சகலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கூடாத காலம் உரத் தட்டுப்பாடு விதிக்கப்பட்டதிலிருந்தே தொடங்கியது. அதனை இந்த ஆளும்தரப்பு நினைவில் கொள்ளவேண்டும். மறுபுறம் ஆசிரியர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இவையா?

இன்று தேசியமக்கள்சக்தியும்ஜேவிபியும் இரண்டாகப் பிளவடைந்துள்ளன. கல்வி அமைச்சராக பிரதமர் ஹிரிணி அமரசூரிய எடுத்ததீர்மானத்தைக்கூட நடைமுறைப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது. மேலதிக வகுப்புக்களைநடத்துவதற்குதடைவிதிப்பதற்கு அவரால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக மகிந்த ஜாசிங்க கருத்து வெளியிட்டுள்ளார். தற்போது இது குறித்த சுற்றறிக்கையும் மீளப் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு பயணித்தால் இந்த ஆளும்தரப்பால் ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது. பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஆளும்தரப்பின் குறைகளைப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டுவோம்.

அந்த வகையிலேயே தகுதியற்ற சபாநாயகர் பதவி விலகுவதற்கான உண்மைகளையும் நாட்டுக்கு வெளிப்படுத்தினோம். இவர்கள் மக்களை ஏமாற்றிஆட்சியைக்கைப்பற்றியவர்கள். மிகக் குறுகிய காலத்துக்குள் மக்களின் அதிருப்தியை பெற்றுக் கொண்ட ஆளும்தரப்பை இதற்கு முன்னர் நாம் பார்க்கவில்லை. எதிர்காலம் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பது எமக்கு தெரியாது என்றார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் இந்தியப் பயணத்தின்போது மீனவர் பிரச்சினை மனிதாபிமான ரீதியில் அணுகப்படவேண்டும்எனக்கூட்டறிக்கையில் கூறப்பட்டது. அதற்கான கலந்துரையாடல் எப்போது ஆரம்பிக்கப்படும் என நேற்று வெள்ளிக்கிழமையாழ்ப்பாணத்தில்ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டன. இரு நாட்டு கடற்றொழில் அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கும் இடையில் நடக்கும் கலந்துரையாடல்கள் தொடரும். அதில் தொழில்நுட்பரீதியானபிரச்சனைகள்உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. மனிதாபிமான உதவிகள் தொடர்பாக ஒரு பேச்சுக்கு நாங்கள் செல்லப்போவதில்லை. இதுதான்எங்களதுமனிதாபிமானநடவடிக்கை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஹிக்கடுவ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 வயதுடையவர். மதுரங்குளி பகுதியைச் சேர்ந்தவர்.

காணாமல்போன நபரை மீட்பதற்கான தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அவர் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 13ஐ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைவுக்குஎமதுமனப்பூர்வமானஅஞ்சலிகள். அவர் இந்தியாவின் பிரதமராக இருந்த காலத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்திருந்தார்.

2011 இல் அப்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனான கூட்டறிக்கையில் '13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து கட்டியெழுப்பி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை ஏற்படுத்தப்படும் என்ற வாக்குறுதியைப் பெற்றவர்.

அவர் பிரதமராக இல்லாத சமயத்திலும் இந்தியப்பிரதமர்நரேந்திரமோடியைச்சந்திக்கச் சென்றபோதுநாம்அவரை, அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி கூறி உரையாடியிருந்தோம். இந்தியாவின் பொருளாதார எழுச்சிக்குக் காரணகர்த்தாவாக இருந்த அன்னாரின் மறைவுக்கு மீண்டும் எமது மனப்பூர்வமான அஞ்சலிகள் - என்றுள்ளது.

# யாழ்ப்பாணத்திற்கு குடிதண்ணீர் தரமாட்டேன் எனக் கூறவில்லை

## சிறீதரன் எம்.பி. இப்படிச் சொல்கிறார்





யாழ்ப்பாணத்திற்குக் குடிதண்ணீர் தரமாட்டேன் என்று தான் ஒருபோதும் கூறவில்லை என்று யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றபோது சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவின் கேள்விக்கு பதில் அளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க மாட்டோம் என்று எச் சந்தர்ப்பத்திலும் கிளிநொச்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவிக்கவில்லை

கிளிநொச்சி மாவட்ட விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கிய பின்னரே அதைப்பற்றி தீர்மானிக்க முடியும் என்றும் இரணைமடு குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் வழங்க முடியுமா என குழு ஒன்றை அமைத்து பரிசீலிக்கவும் எனவும் கூறினேனே தவிர, நான் ஒருபோதும் யாழ்ப்பாண மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க மாட்டேன் என்று தெரிவிக்கவில்லை.

கிளிநொச்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாவது கூறியுள்ளார்களா என்பதை இந்த ஒருங்கிணைப்பு கூட்டத்தில் இருக்கும் அனைவரிடமும் கேட்டறிந்து கொள்ள முடியும். அவ்வாறு யாரும் கூறியிருந்தார்களா என்று உங்களால் முடிந்தால் உறுதிப்படுத்துங்கள் என அருச்சுனாவிற்குப் பதிலளித்திருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். (113)

# வெடுக்குநாறி மலையில் தமிழர்களின் நிம்மதியான வழிபாட்டுக்குரிய வழிவகைகளை ஏற்படுத்துங்கள்

## ரவிகரன் கோரிக்கை

வவுனியா வடக்கு - ஒலுமடு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் தமிழ் மக்கள் நிம்மதியான முறையில் வழிபடுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தை பதிவுசெய்யவும், ஆலயத்துக்கான காணியை வனவளத் திணைக்களத் திடமிருந்துவிடுவிக்கவும், ஆலயவளாகத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்கான அனுமதியை வழங்கவும், ஆலயத்துக்கான பிரதான வீதியை சீரமைக்கவும், மலை உச்சியிலுள்ள சிவலிங்கத்துக்கு ஏற்கனவே இருந்ததைப் போல சிறிய கூடாரம் அமைக்க அனுமதி அளிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கோ பொதுமக்கள் சென்று வருவதற்கோ எவ்வித தடையும் இல்லை என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றபோதும், இந்த ஆலயத்துக்குச் செல்வதற்கான பிரதான வீதி மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால ஆட்சியாளர்கள் அவ்வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசாங்கமானது அவ்வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு குறித்த ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளுக்காக சென்ற அடியவர்கள் குடிநீர் இன்றி மிகுந்த இடர்ப்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

இந்நிலையில், தண்ணீர் தாகத்தால் தவித்த அடியவர்களுக்கு நீர் எடுத்துச்செல்லப்பட்டபோது, கோவில் வளாகத்துக்குள் குடிநீரை எடுத்துச்செல்லமுடியாது எனவும் பொலிஸாரால் தடுக்கப்பட்டது.

காலையில் கோவிலுக்கு வழிபடச் சென்ற மக்களோடு நானும் சென்றிருந்தேன். மாலை வரை தாகத்தால் தவித்து, குடிநீர் வராததால் கோவில் வளாகத்தில் இருந்த நீரோடையில் நீரை எடுத்து அருந்தவேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், குடிநீரை பெறுவதற்காகவும், ஆலய வழிபாடுகளுக்கான நீரைப் பெறும் நோக்கிலும் ஆலய நிர்வாகத்தினர் தற்போது ஆலய வளாகத்திலேயே குழாய்க்கிணறு ஒன்றை அமைப்பதற்கு தயாராக இருக்கின்றனர்.

எனவே, ஆலய வளாகத்தில் குழாய்க்கிணறு அமைப்பதற்கான அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை வெடுக்குநாறிமலை அமைந்துள்ள பகுதி தற்போது வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக சொல்லப்படுகிறது. எனவே, ஆலயவளாகம் வனவளத்திணைக்களத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்.

அத்தோடு இந்த ஆலயத்தை பதிவுசெய்வதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த ஆலயத்தைபதிவுசெய்வதற்குஇடையூறாக இருக்கின்ற விடயங்களைக் களைந்து, கூடிய விரைவில் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேலும், இந்த ஆலயத்தில் இனந்தெரியாதவர்களால் விக்கிரகங்கள் திருடப்பட்டிருந்தன. பின்னர், நீதிமன்ற அனுமதியுடன் ஆலய விக்கிரகங்கள் ஆலய நிர்வாகத்தினரால் வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது.

இந்நிலையில் மலை உச்சியிலுள்ள சிவலிங்கத்தின் மேலாக ஏற்கனவே இருந்ததைப் போல சிறிய அளவிலான பாதுகாப்புக் கூடாரம் அமைப்பதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சிகள் மேற்கொண்டபோது தடுக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. எனவே அங்கு பாதுகாப்புக் கூடாரம் அமைக்கவும் அனுமதிவழங்கப்படவேண்டும். - என்றார்.

# உள்ளூர் உற்பத்தி அரிசி போதியளவு கையிருப்பில்

## விலையில் மாற்றங்கள் இல்லை என்கிறார் யாழ். வணிகர் கழக தலைவர்

உள்ளூர் உற்பத்தி அரிசி இனங்கள் போதிய அளவு கையிருப்பில் இருக்கின்றது. விலையில் மாற்றங்கள் இல்லை.

தென்னிலங்கை மாவட்டங்களில் இருந்து வடமாகாணத்திற்கு வரும் அரிசியை விற்கமுடியாது என யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் ப.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில், யாழ்ப்பாணம் மாவட்ட மொத்த - சில்லறை அரிசி வியாபாரிகளுடன் விலை நிர்ணய கட்டுப்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் யாழ்ப்பாணம் வணிகர் கழக தலைவர் ப.ஜெயசேகரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுவாக அரிசி விலை தொடர்பாக கடந்த திங்கட்கிழமை ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தால் வர்த்தமானி வெளியிடப்பட்டு உள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மீண்டும் வடமாகாணத்திற்கு வருகின்றது.

உள்ளூர் உற்பத்தி அரிசி இனங்கள் போதியளவு கையிருப்பில் இருக்கின்றன. விலையில் மாற்றங்கள் இல்லை. உள்ளூர் மக்கள் பாவிக்கின்ற அரிசியை எந்த விதமான தட்டுப்பாடும் இன்றி கொள்வனவு செய்து கொள்ளமுடியும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வெள்ளைப் பச்சை அரிசி, சம்பா இன அரிசிகள் பாரிய பிரச்சனையாக இருக்கின்றன.

அரசாங்கம் ஒரு விலையை நிர்ணயம் செய்துள்ளனர். அதில் மொத்த, சில்லறை வியாபாரிகள் விற்கமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றனர்.

மொத்த வியாபார விலையாக ஒரு கிலோ வெள்ளைப் பச்சை, அல்லது சம்பா இன அரிசிகள் 215 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. சில்லறை விலையாக 220 ரூபா நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவருவதாக இருந்தால் கிலோவுக்கு 05 ரூபா செலவாகின்றது. அதனை விட கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஏற்றி - இறக்க 01ரூபா செலவாகின்றது.

போக்குவரத்து செலவினமாக மொத்தமாக 06 ரூபா செலவாகின்றது. மொத்த - சில்லறை வியாபாரிகள் இலாபமாக 04 ரூபாவை எதிர்பார்க்கின்றனர்.

கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கு இடையில் அரிசியை ஏற்றி - இறக்க போக்குவரத்து செலவினங்கள் உள்ளிட்ட இலாபமாக 10 ரூபாவை எதிர்பார்க்கின்றனர்.

அரசாங்கம் 05 ரூபா தான் விலையை உறுதிசெய்துள்ளது. இதன் அடிப்படையிலே வியாபாரிகள் எமக்கு முறைப்பாடு செய்ததன் பின்னர் சில்லறை - மொத்த வியாபாரிகளை அழைத்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

வெளி மாவட்டங்களில் இருந்து வடமாகாணத்திற்கு வரும் அரிசியை விற்கமுடியாது. இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புடன் கதைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் தலைவருடன் கதைத்தோம். இதன்போது அவர், எனக்கு இந்த பிரச்சினை விளங்கியுள்ளது.

இதனை அமைச்சு தான் தீர்மானித்துள்ளது. எனவே அவர்களுடன் நீங்கள் தொடர்புகொண்டு கதையுங்கள்- என்றார்.

அந்தவகையில் நாங்கள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சருடன் தொடர்புகொண்டோம். இதன்போது அவரும் இந்த பிரச்சினையை ஏற்றுகொண்டார்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்த பின்னர் அதன் பிரதியை தமக்கு அனுப்புமாறு கூறினார். ஆகையால் நாங்கள் கடிதம் எழுதத் தீர்மானித்துள்ளோம். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய அரசமைப்பு முயற்சிகள்

நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று சிறீ லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கிறார்.

அனுபவமும் அரசியல் முதிர்ச்சியும் கொண்ட அவரது கருத்து மிகக் காத்திரமானது. இருந்தாலும் புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பில் ஆளும் தரப்பின் அக்கறை மிகவும் மந்தமாக இருப்பது கவலைக்குரியது. தேர்தல் காலத்தில் அதனை முதன்மைபடுத்திய ஆளும் தரப்பு இப்போது அதனை ஒரு இரண்டாம் தரப் பிரச்சினையாகக் கையாள்வதாகவே படுகிறது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்தபோதும் அரசமைப்புத் திருத்தங்கள் மற்றும் மாற்றங்களில் மிக மந்தமாகவே ஆளும் தரப்பு நகர்கிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியுடன் ஒப்பிடும்போது இந்த விடயத்தில் தற்போதைய ஆளும்தரப்பு ஆமை வேகத்தில் நகர்வதாகக்கூடச் சொல்லலாம்.

''பல தசாப்தகாலமாக புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிப் பேசப்படுகிறது. இருப்பினும் எந்த ஆளும்தரப்பும் புதிய அரசியலமைப்பினை உருவாக்கவில்லை. முதலாளித்துவ தரப்பினர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

போர் முடிவடைந்தவுடன் அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்தார். ஆனால் போர் வெற்றியை 2010 ஆம் ஆண்டு தேர்தலின் வெற்றிக்காக பயன்படுத்தினாரே தவிர நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பயன்படுத்தவில்லை.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய அரசமைப்பினை உருவாக்கி இந்த நாட்டின் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச நினைத்திருந்தால் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும். ஒருதரப்பினரது தவறான ஆலோசனைகளால் புதிய அரசமைப்பு குறித்து அவர் அக்கறை கொள்ளவில்லை.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இருப்பினும் அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி இனவாத அடிப்படையில் செயற்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ச புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்துப் பேச்சளவில்கூட கவனம் செலுத்தவில்லை. தமிழர்களுக்கு எதிராக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் செயற்பட்டார்.

2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி நாட்டு மக்கள் மத்தியில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பாரம்பரியமான அரசியல் முறைமைக்கு முடிவு கட்டியுள்ளது. புதிய அரசமைப்பினை உருவாக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார். நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்.

தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே கடந்த காலத் தவறுகள் புதிய அரசமைப்பின் ஊடாகத் திருத்தியமைக்கப்படவேண்டும். அப்போதுதான் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியும்'' என்றும் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச நியமித்த புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவராகச் செயற்பட்டு ஒரு வரைவைத் தயாரித்து வழங்கியவர் அவர். அதனால் இந்த விடயங்களில் அவருக்கு நல்ல பட்டறிவும் பிரச்சினையின் ஆழமும் நன்கு தெரியும். ஒரு இடது சாரித் தலைவரான அவர், இந்தப் பிரச்சினையை முதலாளித்துவப் பார்வையில் இருந்து அணுகுவதும் தற்போதைய ஆளும் தரப்பை இடதுசாரியாகப் பார்த்தே இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார் என்பதும் தெரிகிறது. ஆனால், பொருளாதாரநலன்களுக்காகத்தன்னைமுதலாளித்துவநாடுகளுடன் நெருக்கமானதாக வளர்த்தெடுக்கும் அணுகுமுறையைப் பின்பற்ற முயலும் இந்த ஆளும்தரப்பிடமிருந்து பேராசிரியர் திஸ்ஸவிதாரணை எதிர்பார்க்கும் அடைவுகள் கிடைக்குமா என்கிற சந்தேகம் துளிர்விடத் தொடங்குவதை தவிர்க்க முடியவில்லை.

# விடுதலை-2

**தெய்வீகன்**

முள்ளிவாய்க்கால் யுத்தம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்த காலப்பகுதியில் - போரின் இலக்கு கிட்டத்தட்ட முடிவை உத்தேசித்துவிட்ட நிலையில், மக்கள் அழிவைத் தடுப்பதற்கும் - போராட்டத்தைத் தக்கவைப்பதற்கும் - அதன் மூலம் விடுதலைப்புதூலிதூகள் அமைப்பினைப் பாதுகாப்பதற்கும் - அப்போது வன்னியிலிருந்த புத்திஜீவிகள் குழுவொன்று, போராட்டத் தலைமைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தது.

அதாவது, சிறிலங்கா அரசின் யுத்தமானது, புதூலிதூகளின் தலைமையை அழித்து, அதன் மூலம் விடுதலைப்புதூலிதூகள் அமைப்பினை முற்றாக அழித்து, அதன் வழியாகப் போராட்டத்தை நசுக்கிவிடுவது என்ற இலக்கினை நோக்கி மூர்க்கமாக நகர்ந்துகொண்டிருக்கிறது. அந்த உக்கிரத்தை மாற்று உபாயம் ஒன்றின் ஊடாக உடனடியாக எதிர்கொள்ளவேண்டும் என்பது அந்தக் குழுவினரின் வேண்டுதலாக இருந்து. அந்த அறிக்கையில் பல்வேறு விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. முக்கியமானது, விடுதலைப் புதூலிதூகள் அமைப்பின் தலைவர் பதவியிலிருந்து பிரதூபாகதூரன் அவர்கள் விலகுவது. புதிய தலைமையை நியமித்து, அந்த தலைமையின் ஊடாக சர்வதேச மத்தியஸ்தத்துடன் அரசுடன் சமரசத்துக்குச் செல்வது. போரை நிறுத்தி, தொடர்ந்துகொண்டிருந்த மக்கள் அழிவினைத் தடுப்பது என்பதுதான் உடனடி இணக்கப்பாடு. அதன்பிறகு, முக்கியஸ்தர்களது சரணடைதல் தொடர்பான பேச்சு என்று பல விடயங்கள் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தன.

போர் அகோரமாக இருந்த அக்காலப்பகுதியில், விடுதலைப்புதூலிகதூள் அமைப்பு அவ்வாறானதொரு முடிவை எடுத்திருந்தால், அது எதிர்பார்த்த வெற்றியை வழங்கியிருக்குமா? சமரச முயற்சிகள் அழிவைத் தடுத்திருக்குமா? என்பவற்றுக்கெல்லாம் அப்பால், அந்த அறிக்கையினதும் கோரிக்கையினதும் தொனிப்பொருள் -

சித்தாந்த ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட ஒருபோராட்டத்தில் திரண்டிருக்கும் மக்கள் குழுவுக்கு தலைமை எனப்படுவது, ஒரு காலப்பகுதியில் வழிகாட்டும் ஆளுமை. அவ்வளவே. அவரது காலத்திற்குப் பிறகு அந்த சமூகத்திலிருந்து இன்னொரு தலைமுறைத் தலைவன் அந்துப் பொறுப்பை ஏற்றுக்கொள்வான். அதுவே, அந்தப் போராட்டத்தின் தேவை அடைந்துள்ள வெற்றி. அதுவே, அந்தப் போராட்டத்தின் நீட்சி பெற்றுள்ள முதிர்ச்சி. அதுவே, அந்துப் போராட்டத்தின் தத்துவார்த்தமான பரிமாணம் அடைந்துள்ள எழுச்சியும் முழுமையும் ஆகும். எமக்கு ஒரேயொரு தலைமைதான் உள்ளது. அதனைப் பேணிப் பாதுகாக்கவேண்டியதுதான் ஆயுளுக்கும் எமது பெருங்கடமை என்று ஒரு மக்கள் கூட்டம் எண்ணுமாயின், அது கிட்டத்தட்ட ஒரு குதிரையை பந்தயத்திற்காகக் கட்டி வளர்ப்பது போன்றது. போராட்டத்தின் தெளிவும் அதன் கோட்பாட்டு அடித்தளமும் பரவலடையாத சமூகத்தின், பாதுகாப்பற்ற உணர்வே ஒற்றைத்தலைமைக்கான நெருக்குவாரம்.

தலைமை என்பது ஒருபோதும் வழிபாட்டுக்குரியதாக - மீள் நிரப்பப்படமுடியாத ஒன்றாக - இருக்கமுடியாது. இருக்கவும்கூடாது. அவ்வாறு ஒரு பெரும் போராட்டத்தின்தலைமையைக்கட்டமைத்து - அதனை அழிக்கமுடியாத ஒன்றாக முன்னிலைப்படுத்தும்போது, அந்தத் தலைமையை அழித்தொழித்தாலும், அந்தச் செய்தியை உறுதிப்படுத்தாமல், 'அவர் திரும்பி வரக்கூடும்' என்ற மர்மத்தையே அதிகாரம் வர்க்கம் வஞ்சகத்தோடு பேணிக்கொண்டிருக்கும். ஏனெனில், அதன் மூலம், இன்னொரு தலைமைக்கான எழுச்சியைத் தொடர்ந்து காயடித்துக்கொண்டேயிருக்கலாம்.

வெற்றிமாறனின் 'விடுதலை-2' இறுதிக்காட்சி விட்டுச் செல்கின்ற கனமான இந்தச் செய்தி, ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரையும் பதினைந்து வருடங்கள் பின்னகர்த்திச் சென்று, ஏற்க மறுத்த பல உண்மைகளை உண்டு செமிக்கச் சொல்லித் தருகிறது.

'விடுதலை - 1' படத்தில் தனி மனித உணர்வுகளைச் சுற்றி வந்த கதை, இரண்டாம் பாகத்தில் சித்தாந்த ரீதியான - மிகப் பாரமான - உரையாடல்களாக உரு மாறுகிறது. குமரேசனிலிருந்து வாத்தியருக்குத் தாவுகின்ற கதை, பெருந்தளத்தில் பல கிளைகளாக விரிகிறது. காட்சிக்குக் காட்சி, பார்வையாளனை தனது அரசியல் சரி - பிழைகளோடுவிவாதித்துக்கொள்ளவேண்டிய விளிம்புகளை நோக்கி நகர்த்துகிறது. தனக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய சினிமா வெளிச்சத்தில், இப்படியான தத்துவார்த்தமானதொரு படத்தை இறுக்கமாகச் சொல்ல விளைந்திருப்பது, தன் மீதும் தனது திரைமொழி மீதுமிருக்கின்ற வெற்றி மாறனின் அபாரமான துணிச்சல்.

இடதுசாரிகளின் சாதிய - வர்க்க விடுதலைப் போராட்டமும் அதில் அவர்களது அர்ப்பணிப்பும் தியாகமும் என்பது பல லட்சம் புத்தகங்களில் நிறைந்து கிடக்கும் விடயம். ஆனால், அதனை, ஜெயமோகனின் 'துணைவன்' என்ற சிறுகதையிலிருந்து பரந்த விரிந்த திரைக்கதையாகக் கட்டியமைத்திருப்பதும், அதிகாரம் என்ற உச்சபோதையைச் சுவைத்துக்கொள்ளும் எவரும், அதில் வெறிகொண்டவர்களாக மாறி, பாதிக்கப்பட்ட சக மக்களைக்கூடத் தின்று சுவைப்பார்கள் என்பது உட்பட பல உள்ளடுக்குகளை இந்தப் படத்தின் வழியாகக் காண்பித்திருக்கும் புள்ளிகளும் மிகவும் நுட்பமானவை.

தான் பேச விரும்பும் அரசியலை தனது கலைப்படைப்பின் வழியாக அடர்த்தியாகப் பேசுவது என்பது எல்லாப் படைப்பாளிக்கும் இலகுவில் அமைந்து விடாத ஒன்று. அந்தவகையில், வெற்றி மாறன், விடுதலை - இரண்டாம் பாகத்திலும் பெரு வெற்றி அடைந்திருக்கிறார் என்பதிலும் பார்க்க பெருமைக்குரியவெற்றியைஈட்டியிருக்கிறார் என்று கூறவேண்டும்.

மக்களரசியல் என்பது எடுத்தார் கைப்பிள்ளையாகிவிட்ட இன்றைய நிலையில் - சித்தாந்த ரீதியான - கற்றுத் தெளிவுகொள்ளவேண்டிய - போராட்டங்களும் அதன் இலக்குகளும் மறைந்து, போராட்டங்கள் பேஸ்-புக் லைவ்களாக, வட்ஸ் - அப் குறூப் குத்தாட்டங்களாக மாறிவிட்ட நிலையில் -

'விடுதலை - 2' அனைவரும் நிச்சயம் பார்க்கவேண்டிய திரைப்படம். எமது அன்றாட அரசியலில் எவ்வாறு கரிசனை கொள்வதுஎன்றஅடிப்படைச்சிந்தனைக்கான உரையாடலை நோக்கி வெற்றிமாறன் அழைத்துச் செல்கிறார்.

© https://web.facebook.com/theivigan.panchalingam

# மன்மோகன் சிங்கின் புகழுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடலுக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். உடல் நலக்குறைவால் தனது 92 ஆவது வயதில் உயிரிழந்த முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல் டில்லியிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை தனிப்பட்ட விஜயமாக டில்லி சென்றார். நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தியாவின் மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவேந்தல் உரையை ஆற்றுவதற்காக அவர் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.







இந்நிலையிலேயே அவர் மன்மோகன் சிங்கின் உடலுக்கும் அஞ்சலி செலுத்தியுள்ளார். மேலும் மறைந்த முன்னாள் பிரதமரின் மனைவி குர்ஷரன் கௌர் கோலியை சந்தித்து, அவரது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் அங்கு வருகை தந்திருந்த இந்திய எதிர்க்கட்சி தலைவர் ராஹுல் காந்தியுடனும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். உத்தியோகபூர்வமாக அன்றி தற்செயலாக இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சீன பல்கலை மாணவர்கள் குழு ஆய்வுக்காக இலங்கை வருகை

ஹொங்கொங் சீனப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 16 இளங்கலை மாணவர்கள் ஆய்வுப் பயணத்தில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு 10 நாள் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் குழு நேற்று (வெள்ளிக்கிழமை) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த மாணவர்கள் ‘இலங்கையில் பெண்களின் உரிமைகள்’ என்ற தலைப்பில் ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டு ஆய்வுக் கட்டுரை ஒன்றை தயாரிக்க உள்ளனர்.

இது தவிர ஜா-எல, பமுனுகம கொன்சால்வ்ஸ் கல்லூரியின் 50 மாணவர்களின் உதவியுடன் மற்றுமொரு செயற்திட்டத்தையும் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வுப் பயணத்தின் பின்னர், இந்த மாணவர்கள் சீகிரியா மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களுக்கு சுற்றுலா செல்லவும் திட்டமிட்டுள்ளனர்.

மேலும், இந்த 10 நாள் விஜயத்தில் குறித்த மாணவர்கள் குழுவிற்கு தேவையான வசதிகளை கிறிஸ்தவ இளைஞர்கள் சங்கம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# ஆளும்தரப்பை மாற்றுகின்ற சிந்தனையில் நாம் இல்லை

## சாணக்கியன் தெரிவிப்பு

நாங்கள் அரசாங்கத்துடன் போய் சண்டை பிடித்து, அரசாங்கத்தை விமர்சனம் செய்து, அரசாங்கத்தை மாற்றி அமைக்க வேண்டும், என்ற சிந்தனையில் நாங்கள் இல்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை உடன் இருக்கின்ற அரசாங்கத்தில் அரசியல் தீர்வு விடயத்தை அடையக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அதனை நாங்கள் சாதகமாகத்தான் பயன்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வரையறுக்கப்பட்ட குருமண்வெளி சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சாதனையாளர் பாராட்டு விழாவும் குருமண்வெளியில் அமைந்துள்ள அச்சங்கத்தின் மண்டபத்தில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டிலே அரிசி தட்டுப்பாடு வந்தபோது அமைச்சர் தெரிவித்தார், சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக 210 ரூபாவுக்கு அரிசியும், 130 ரூபாவுக்கு தேங்காயும் கொள்வனவு செய்யலாம் எனத் தெரிவித்தார். மக்கள் அதனைக் கொள்வனவும் செய்யலாம். ஆனால் எமது பிரதேசத்தில் ஒரு சதொச விற்பனை நிலையம் கூட இல்லை.

மட்டக்களப்பு நகரில் மாத்திரம் ஒரே ஒரு சதொச விற்பனை நிலையம் அமைந்துள்ளது. அந்த விற்பனை நிலையத்தைக்கூட மூடுவதும் திறப்பதுமாக மூன்று தரம் மூடித் திறந்து இருக்கின்றார்கள். இருந்தும் அங்கும் பொருள்கள் இல்லை. களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நகரில் இருக்கின்ற சதொச விற்பனை நிலையத்துக்குச் சென்று பொருள்களை மக்கள் வாங்க முடியாது.

ஆனால் கூட்டுறவு சங்கங்களை வைத்து தெற்கிலே பல பிரதேசங்களிலே கோப் சிற்றி எனும் வர்த்தக நிலையங்களை அரசாங்கம் திறந்துள்ளது. குருமண்வெளியில் அமைந்திருக்கின்ற கூட்டுறவு சங்கங்கத்தைப் போன்ற சங்கங்கள் கோப் சிற்றிகளை உருவாக்க வேண்டும். அதனூடாக அரசாங்கம் குறைந்த விலையில் வழங்குகின்ற பொருள்களை மக்களுக்கு விநியோகிக்க முடியும்.

நாங்கள் அரசாங்கத்துடன் போய் சண்டை பிடித்து, அரசாங்கத்தை விமர்சனம் செய்து, அரசாங்கத்தை மாற்றி அமைக்க வேண்டும், என்ற சிந்தனையில் நாங்கள் இல்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை உடன்இருக்கின்ற அரசாங்கத்தில் அரசியல் தீர்வு விடயத்தை அடையக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அதனை நாங்கள் சாதகமாகத்தான் பயன்படுத்த வேண்டும். ஆனாலும் எமது மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைப் பற்றியும் நாங்கள் பேசாமல் இருக்க முடியாது.

தற்போது அரிசி தொடர்பில் பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளது. அது விவசாயிகள் மத்தியில் பெரிய பிரச்சினையாக வந்துள்ளது. அரசாங்கம் அரிசி இறக்குமதி செய்கின்றது. எமது பிரதேசத்தில் பல விவசாயிகள் இருக்கிறார்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 லட்சத்துக்கு மேற்பட்ட ஹெக்டேயர்களில் வேளாண்மை செய்திருக்கின்றார்கள்.

தற்போது அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்வதன் ஊடாக ஒரு மாதத்திற்கு முன்னர் வழங்குவதற்கான கோரிக்கை செய்யப்பட்ட அரிசி இலங்கைக்கு வியாழக்கிழமைதான்



வந்து இறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் எமது பகுதி ஜனவரி பெப்ரவரி மாதத்தில் தான் நெல் அறுவடை செய்கின்ற காலம்.

இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி தற்போது சந்தைக்கு வருமாறு இருந்தால் ஜனவரி 15ஆம் தேதி வரைக்கும் அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் அந்த அரிசி போய் சேரும். அந்த வேளையில் அரிசியின் விலை குறையும். அந்த சந்தர்ப்பத்தில் எமது விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லின் விலை குறைவடையும் பகுதி பட்சத்தில் எமது விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்வார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவோம் என சொன்னார்கள். ஒரு ஹெக்டருக்கு ஒரு லட்சம் என்றார்கள் அந்த இழப்பீட்டுத் தொகையும் விவசாயிகள் பயிர் மீண்டும் பயிர் செய்து மூன்றாவது உரம் இடும் காலப்பகுதியில் தான் அந்த தொகை வழங்கப்படும் இச்சூழ்நிலையில்தான் தற்போது அரசாங்கத்தின் நிலைமை சென்று கொண்டிருக்கிறது.

ஆனால் இந்த கூட்டுறவு சங்கங்களை இன்னும் மேன்மேலும் பலப்படுத்தினால் அரிசி பிரச்சினைகள் போன்ற விடயங்கள் எழும்போது எதிர்காலத்தில் மக்களுக்கு சிறந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இதன்போது தெரிவித்தார்.

# சட்ட விரோத மணல் கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீவில் பகுதியில் சட்டவிரோதமாக முறையில் களஞ்சியப்படுத்த பட்டிருந்த ஒரு தொகை மணல் கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவால் நேற்று (வெள்ளிக்கிழமை) மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அகழ்ந் தெடுக்கப்பட்ட மணல் களஞ்சியப் படுத்தப்பட்டிருப்பது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் குறித்த இடத்திற்கு சென்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மணலை மீட்டுள்ளனர்.

# எம்.ஓ.பி. உர விநியோகம் மாத்தளையில் தொடக்கம்

(மஸாஹிம்)

மாத்தளை மாவட்ட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் பொருட்டு உலக உணவுத்திட்டத்தின்கீழ் எம்.ஓ.பி. உரம் 365 தொன் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதாக மாத்தளை மாவட்ட விவசாய ஆணையாளர் குமாரிஹாமி தெரிவித்தார்.

தற்போது 150 தொன் உரம் ஐந்து விவசாய மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மையங்களுக்கும் உரத்தை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் ஏறக்குறைய 21.935 ஹெக்டயார் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு சுமார் 542 தொன் எம்.ஓ.பி. உரம் தேவைப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

உரம் கிடைத்தவுடன் மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் விவசாய சேவை ஆணையாளர் குமாரிஹாமி மேலும் தெரிவித்தார்.

# 2025ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் அதிக நிதி

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

இம்முறை வரவு செலவு திட்டத்தில் கல்விக்கும், சுகாதாரத்துக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் பேசப்படும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் எதிர்கால திட்டமிடல் இல்லாமல் உள்ளமை கவலையளிக்கிறது. நாங்கள் எதிர்காலம் தொடர்பில் திட்டமிடல்களை தயாரிக்க வேண்டும். அவ்வாறான திட்டமிடல்கள் மூலமே முன்னேற்றங்களை உண்டு பண்ணலாம்.

சுகாதாரம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் அத்தோடு, குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு இம்முறை கல்விக்கும், சுகாதாரத்துக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அத்தோடு கிடைக்கவுள்ள பாரிய நிதி மூலம் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறான குறைபாடுகளை அடையாளம் கண்டு அதனை தீர்க்கும் திட்டங்களை தயாரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# போதையில் வாகனம் செலுத்தினால் சாரதி உரிமத்துக்கு ஒரு வருடத் தடை

## பொலிஸார் எச்சரிக்கை

எதிர்வரும் காலங்களில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளின், சாரதி அனுமதிப்பத்திரம் சுமார் 12 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படும் அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆகையால் மதுபோதையில் வாகனம் செலுத்த வேண்டாம் என அனைத்து சாரதிகளையும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வியாழக் கிழமை காலை 06 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மதுபோதையில் வாகனங்களை செலுத்திய 395 சாரதிகளுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களை குறைக்கும் நோக்கில், பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய, நாடு முழுவதும் விசேட போக்குவரத்து நடவடிக்கை கடந்த 20 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த சிறப்பு நடவடிக்கை பொலிஸாரால் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்மோகன் சிங்கின் மறைவுக்கு ஜனாதிபதி அநுரகுமார இரங்கல்






Anura Kumara Dissanayake
@anuradisanayake

On behalf of the people of Sri Lanka and myself, I extend my heartfelt condolences to the Republic of India, Dr. Manmohan Singh's family, and his countless admirers worldwide. A visionary leader, Dr. Singh's influence transcended national boundaries. As Prime Minister from 2004 to 2014, his transformative policies, like the Right to Education Act and the Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme, reflected his steadfast commitment to equity and inclusivity.

A tireless advocate of international collaboration, he forged lasting alliances, contributed to coalitions like BRICS, and showcased remarkable diplomacy through achievements such as the Indo-US nuclear agreement. His humility, intellect, and dedication to public service will forever inspire future generations. May his soul find peace and be united with the divine.

=இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தி வருமாறு -

நான் எனது சார்பிலும், இலங்கை மக்கள் சார்பிலும் இந்தியக் குடியரசுக்கும், கலாநிதி மன்மோகன் சிங்கின் குடும்பத்தாருக்கும், உலகெங்கிலும் அவர் மீதான பற்றை வெளிப்படுத்தும் எண்ணற்றவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறேன்.

தொலைநோக்கு கொண்ட தலைவரான கலாநிதி மன்மோகன் சிங்கின் வழிகாட்டல் இந்தியாவுக்குள் மாத்திரம் மட்டுப்படவில்லை. 2004 முதல் 2014 வரை இந்தியாவின் பிரதமராக அவர் செயற்படுத்திய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலைவாய்ப்பு செயற்திட்டம் போன்ற மாற்றத்துக்கான திட்டங்கள் என்பன சமத்துவம், தலையீடு தொடர்பிலான அவரது உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

சர்வதேச ஒத்துழைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கலாநிதி மன்மோகன் சிங், நீண்டகால கூட்டுறவு கூட்டணிகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் பிரிக்ஸ் போன்ற அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்தியா, அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்கள் மூலம் அவரது சிறந்த இராஜதந்திரம் தெரிகிறது. அவரது தன்னடக்கம், அறிவாற்றல் மற்றும் அரச சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியன நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நிலையான முன்மாதிரியாகவும் ஊக்குவிப்பாகவும் அமையும். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும்! - என்றுள்ளது.

# வடமாகாண பஸ் கம்பனிகளின் இணையம் அமைச்சர் சந்திரசேகரன் இடையே சந்திப்பு

வடக்கு மாகாண கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்துக்கும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) இணையத்தின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, தனியார் போக்குவரத்து துறையினர் எதிர்கொள்ளும் நேர அட்டவணை பிரச்சினைகள், பஸ் தரிப்பு நிலைய பிரச்சினைகள், தனியார் போக்குவரத்து துறையில் கடமை புரிபவர்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்படாமை, அரச போக்குவரத்து துறையினரின் நியாயமற்ற செயற்பாடுகள், தனியார் மற்றும் அரச போக்குவரத்து துறையினருக்கு இடையே அமைச்சு மட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை உள்ளிட்ட பல விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதில் அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமாரன், வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய தனியார் போக்குவரத்து சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# முட்டை விலை குறைந்தபோதும் வெதுப்பிகள் விலை குறையாது

சந்தையில் முட்டை விலை குறைந்துள்ளபோதும் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

முட்டை விலை குறைவடைந்துள்ள நிலையில் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை குறைப்பு செய்யாமல் இருப்பது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இலங்கையில் முட்டை விலை காலநிலை போன்றது. இன்றுள்ள விலை நாளை இல்லை. நாளுக்கு நாள் மாற்றமடைகிறது. 15, 20 ரூபாவுக்கு இருந்த முட்டை 60, 70 ரூபாவரை விலை அதிகரித்தது. தற்போது மீண்டும் 25,30 ரூபாவரை விலை குறைந்துள்ளது.

இந்த விலை குறைப்பை அடிப்படையாகக் கொண்டு பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை குறைக்க முடியாமல் இருக்கிறது.

பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை குறைப்பு மேற்கொள்வதற்கு நிச்சயமாக கோதுமை மா மற்றும் மாஜரின் விலை குறைவடைய வேண்டும்.

கோதுமா விலை குறைப்பு தெரிந்தளவில் இரண்டு வருடங்களுக்கும் அதிக காலமாக இடம்பெறவில்லை. டொலரின் பெறுமதி 300, 400 ரூபாவுக்கு இருக்கும்போது இருந்த விலையே தற்போதும் கோதுமை மா விலை இருந்து வருகிறது.

அதனால் இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனால், கோதுமை மா மற்றும் மாஜரின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் தற்போது கடைகளில் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கேக், 700 ரூபாவரை குறைத்து விற்பனை செய்ய முடியும்.

அவ்வாறு இல்லாமல் முட்டை விலை குறைவடைந்தவுடன் பேக்கரி பொருள்களின் விலையில் மாற்றம் செய்ய எந்தவகையிலும் முடியாது. - என்றார்.

# கிளிநொச்சியில் 36 சதவீதமான காணிகள் இராணுவத்தின் வசம்

## விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறீதரன் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 சதவீதமானமை, போர் முடிவுற்ற 14 ஆண்டுகளின் பின்னரும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமலுள்ளமை மாவட்டத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்பு, பூர்த்தி செய்யப்படாத வீட்டுத்திட்டங்களுக்கான விசேட நிதியீட்டங்களைக் குறித்த பயனாளிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல், மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்தல், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்தல் மற்றும் வெள்ளப் பாதிப்பால் சேதமடைந்த வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்த முன்மொழிவுகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடந்த 20ஆம் திகதி எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதனடிப்படையில், வியாழக்கிழமை நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம், கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்காக் காணி உள்ளிட்ட



நகர்ப்புறக் காணிகள் பலவற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. 441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போதும் இராணுவத்தின் வசமுள்ளது.

இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணக்கானோருக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுப்பயன்பாட்டு நிறுவனங்களை அண்மித்தும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மூடுவதென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதன் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் சிறீதரன் கோரிக்கைவிடுத்திருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

## அரிசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோல்வியடைந்துள்ளன என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி நிர்வாக செயலாளர் ரேணுக பெரேரா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் பணியகத்தில் நேற்றுசெய்தியாளர்களைச்சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு ஆளும்தரப்புக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை. விவசாயிகளின் உழைப்பை அரிசி உற்பத்தியாளர்கள் சூறையாடுவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்தவுடன் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு அரிசி உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைப்பேன்ற என்று குறிப்பிட்டார். ஆனால் எதையும் செய்யவில்லை.

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண குறுகிய கால அடிப்படையில் அரிசியை இறக்குமதி செய்வதாக ஆளும்தரப்புக் குறிப்பிட்டது. ஆனால் இதுவரை அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. ஆனால் தனியார் இறக்குமதியாளர்கள் குறித்த காலப்பகுதியில் 72 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரிசியின் விலையைக் குறைப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி இன்று அரிசி உற்பத்தியாளர்களுக்கு அடிபணிந்துள்ளார். அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

அரிசித் தட்டுப்பாட்டுக்கு பேச்சளவில் மாத்திரமே தீர்வு முன்வைக்கப்படுகிறது. நடைமுறையில் ஏதும் சாத்தியப்படவில்லை. மின்கட்டணம் மற்றும் எரிபொருள் விலையை குறைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் மின்கட்டணமும் குறையவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தேர்தல் பரப்புரைகளில் நடைமுறைக்கு சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கியுள்ளார் என்பதை நாட்டு மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்றார்.

## 72ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைப் பச்சை அரிசியும் 32 ஆயிரம் 40ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டரிசியும் அடங்குகின்றன. மேலும் சுங்கத்துக்கு அனுப்பப்படும் இறக்குமதி அரிசியை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த இறுதி திகதி டிசெம்பர் 20. எனினும் கள நிலையைக் கருத்தி 2025 ஜனவரி 10 வரை இறக்குமதிக்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த காலப்பகுதிக்குள் மேலும் பெரும் தொகை அரிசி சுங்கத்துக்கு வரும் என எதிர்பார்க்கிறோம். இறக்குமதி செய்யப்படும் அரிசி மனித பாவனைக்கு உகந்ததா என்றே நாங்கள் ஆரம்பமாக பரிசோதித்துப் பார்க்கிறோம். அதற்கே சில நாட்கள் செல்கின்றன. அதன் பின்னர் விரைவாக அதனை வெளியேற்ற நடவடிக்கை எடுகிறோம்.

அத்துடன் அரிசி இறக்குமதி செய்ய அனுமதி அளித்ததில் இருந்து இன்றுவரை தனியார் துறையினரே அரிசியை இறக்குமதி செய்திருக்கிறது. அரச நிறுவனங்களால் இதுவரை இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லி கூறுவதைப்போன்று அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று தெரிவிக்கவில்லை. இருப்பினும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று மோடி வலியுறுத்தியிருந்தார். இந்தப் பின்னணியிலேயே கஜேந்திரகுமாரின் கருத்-து வெளிப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாண சபைகள் முறை தொடர்ந்து இருக்கும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்புக் கூறிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. மாகாணசபைத் தேர்தல்களை நடத்தி 13ஆவது திருத்தத்தை சாத்தியமானளவு அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலமே ஆளும்தரப்பு அது விடயத்தில் ஓரளவு நம்பகத்தன்மையைப் பெறமுடியும் என்று பத்திரிகையாளர் ஒருவர் 'எக்ஸ்' தளத்தில் செய்த பதிவுக்குப் பதிலளித்தே கஜேந்திரகுமார் தனது கருத்தை வெளியிட்டிருந்தார்.

மாகாணசபை முறையையோ அல்லது 13ஆவது திருத்தத்தையோ இல்லாமல் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள் இது வரையில் நம்பிக்கை வைத்திருக்கக்கூடும். ஆனால், அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த அரசுத் தலைவர் அநுராகுமார திசாநாயக்கவுடன் பேச்சு நடத்திய பிறகு அவருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 13ஆவது திருத்தத்தை பற்றி எதையும் கூறுவதைத் தவிர்த்தார். இதன் மூலமாக கூறப்பட்ட செய்தியை தமிழ்க் கட்சிகள் விளங்கிக் கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை என்றும் அந்த பத்திரிகையாளர் தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள கஜேந்திரகுமார்,

தமிழ் மக்களின் சார்பிலேயே இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திட்டது என்பது முக்கியமாக கவனிக்கப்படவேண்டியதாகும். சமாதான உடன்படிக்கையில் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருக்கும்வரை தமிழ் மக்கள் சார்பில் தலையீடு செய்வதற்கான கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு என்று நான் நினைக்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில் சமாதான உடனபடிக்கை பொருத்தமற்றது என்று இந்தியாவே உணருமானால், அது முற்றுமுழுதாக வேறுவிடயம். நாங்கள் விரைவாக சிறந்த ஒரு தெரிவைக் கண்டறியமுடியும். ஒற்றையாட்சி அரசின் கீழ் எந்த அதிகாரப் பகிர்வும் சாத்தியமில்லை என்று நீதிமன்றங்கள் திரும்பத் திரும்ப கூறியிருக்கும்போது 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் எவ்வாறு நடக்கமுடியும்?

அதனால் 13ஆவது திருத்தம் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வின் தொடக்கப்புள்ளியாகக்கூட ஒருபோதும் இருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

## சீன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மற்றும் சீனாவுக்கிடையிலான இருதரப்பு உறவு, இந்நாட்டு பொதுசுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஆதரவளிப்பதன் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அதிநவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய இந்த மருத்துவமனைக் கப்பலில் ஸ்கேன் உள்ளிட்ட அனைத்து பரிசோதனை சேவைகள் மட்டுமன்றி , சீன அக்குபஞ்சர் உள்ளிட்ட சீன ஆயுர்வேத மருத்துவச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

அறுவைச் சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவுகள், அம்பியூலன்ஸ், ஹெலிகாப்டர் மற்றும் சிறப்பு மருத்துவ சேவைகள் உட்பட பல வசதிகளை இக்கப்பல் கொண்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள அவசரகால சூழ்நிலைகளுக்கு உடனடியாக மனிதாபிமான முறையில் நிவாரணம் வழங்குவதே இந்த கப்பலின் முக்கிய நோக்கமாகும். மேலும் குறித்த மருத்துவமனை கப்பல் சீன

அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டதுடன் 2008ஆம் ஆண்டு முதல் இக்கப்பல் மருத்துவ சேவையை வழங்கி வருகிறது என்றார்.

சீன அரசாங்கத்தின் 'மிஷன் ஹார்மனி - 2024' திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மருத்துவக் கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளது

இந்த மருத்துவமனைக் கப்பல், டிசெம்பர் 21 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டது. இந்நாட்டு மக்களுக்கும், இந்நாட்டில் தங்கியுள்ள சீன மக்களுக்கும் இலவச மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை சேவைகளை மேற்படி கப்பல் வழங்கியது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாவட்டத்தில் காய்ச்சலால் குழந்தையும் குடும்பஸ்தரும் சாவு

யாழ்ப்பாணத்தில்காய்ச்சலால்பீடிக்கப்பட்டு மூன்று மாத குழந்தை ஒன்றும், குடும்பஸ்தர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்பிறந்துமூன்று மாதங்களே நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று வியாழக்கிழமை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. பன்னாலை, தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த குழந்தைக்கு கடந்த 24 ஆம் திகதி காய்ச்சல், இருமல், சளி ஏற்பட்டது. அதற்கு சிகிச்சை பெறுபவதற்காக பெற்றோர் குழந்தையை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இந்நிலையில் குழந்தைகளுக்கு சுவாசப் பிரச்சினை ஏற்பட்டவேளை மேலதிக சிகிச்சைக்காக குழந்தை 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி வியாழன் மாலை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இருதய செயலிழப்பு காரணமாக குழந்தை உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நான்கு நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கைதடி மேற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நவரத்தினம் தனுசன் (வயது-34) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த 23ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் 24ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் ;வியாழக்கிழமை பிற்பகல் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

# தனியார் காணிகள் முப்படைகள் வசம் இருந்தால் உடனே அறியத் தாருங்கள்

## காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

முப்படையினரின் வசம் தங்களின் காணிகள் இருக்குமாயின் அது குறித்த உரிய தகவல்களை அறியத்தருமாறு வமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இ.முரளிதரன் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் -

முப்படையினின் வசம் உள்ள காணிகளை மக்களுக்காக விடுவிப்பதற்கு படைகளின் ஆளணித்துவத்தை குறைக்க வேண்டும்.

மேலும், வடக்கு மக்களுக்கு நாங்கள் தெரிவிப்பதாவது, உங்களுடைய சொந்த காணிக்குள் இராணுவ படைமுகாம் இருக்குமாயின் எமக்கு தகவல் தாருங்கள்.

இது தொடர்பிலான முழுமையான தகவல்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மேலும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் காணி அமைச்சரை சந்திப்பதற்கான நடவடிக்கைகளை காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது, உரிய தரவுகள் இருக்குமாயின்எமக்குகாணிபிரச்சினைக்குதீர்வு காணுவது தொடர்பில் கலந்துரையாடுவோம். - என்றார்.

# ஊடகவியலாளரை தாக்கி கடத்த கிளிநொச்சியில் பெரும் முயற்சி

## மாவட்ட ஊடக அமையம் கண்டனம்

கிளிநொச்சியில் சுயாதீன ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனை வியாழக்கிழமை தாக்கி வாகனத்தில் கடத்திச் செல்ல முற்பட்டதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் அவர்கள் கூறினர்.

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தமிழ்ச்செல்வனை வாகனத்தில் வந்தோர் வழிமறித்துத் தாக்கித் தமது வாகனத்தில் கடத்திச் செல்ல முற்பட்டனர் என்று முறையிடப்பட்டுள்ளது. எதிர்த்துப் போராடிய தமிழ்ச்செல்வன் வாகனத்திலிருந்து வெளியே பாய்ந்து தப்பியோடினார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மாலை 5.00 மணியளவில் கிளிநொச்சி ஏ- 9 வீதியில் சம்பவம் நடந்துள்ளது.

இனந்தெரியாதோரால் தமிழ்ச்செல்வன் கடத்த முற்பட்டதையும் தாக்கப்பட்டமையையும் கிளிநொச்சி ஊடக அமையம் கண்டித்துள்ளது.

"தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அரசியல் குறைபாடுகள், மக்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகள், நிர்வாக முறைகேடுகள், ஊழல், சுற்றுச் சூழல் சிதைப்பு, சட்டவிரோதச் செயற்பாடுகள், போதைப்பொருள்பாவனை போன்றவற்றுக்கு எதிராக மிகவும் துணிச்சலான முறையில் செய்திகளையும் செய்திக் கட்டுரைகளையும் அளித்து வருபவர் தமிழ்ச்செல்வன். அவர் மீதான தாக்குதலானது, அவருடைய பணிகளை முடக்குவதற்கான உள்நோக்கைக் கொண்டதாக சந்தேகம் கொள்ள வைக்கிறது. கடந்த 20 ஆண்டுகளாக ஊடகப் பணியாற்றிவரும் தமிழ்ச்செல்வன் யுத்தகாலத்திலும் யுத்தத்திற்குப் பிந்திய காலத்திலும் துணிச்சலாகவும் நேர்மையாகவும் பணியாற்றியவர். இத்தகைய சிறப்பு மிக்க ஊடகவியலாளர் ஒருவரின் மீதான தாக்குதலானது, மக்களுடைய நல் வாழ்வுக்கான எதிர்காலத்தின் மீதான அச்சுறுத்தலாகவே கொள்ளப்படவேண்டும்" என்று அமையம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சம்பவங்கள் மக்களிடையே பதட்டத்தை உருவாக்குவதோடு ஊடகத்துறைக்கும் பாரிய சவாலை ஏற்படுத்துகிறது. இந்தச் சம்பவம் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அமையம் வலியுறுத்தியுள்ளது. (113)

# வவுணதீவு நீர்நிலையிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பிமடு பகுதியில் உள்ள நீர்நிலையிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

வவுணதீவு,காந்திநகர் சின்னசிப்பிமடு பகுதியை சேர்ந்த 51வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை காலை வீட்டிலிருந்து சென்றவர் இதுவரையில் வீடு திரும்பாமையால் உறவினர்கள் தேடியுள்ள நிலையில் சடலமாக குறித்த பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்கு வந்த வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் மரணவிசாரணைகளை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

சடலம் அழுகிய நிலையில் காணப்படுவதுடன் உடலில் சில காயங்களும் காணப்பட்டன என சடலத்தைப் பார்வையிட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

மேலும், இது தொடர்பான விசாரணைகளை வவுணதீவு பொலிஸ் நிலைய பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.





# கண்ணீரால் நனைந்த கல்முனைப் பிரதேசம்

(பாறுக் ஷிஹான்)

ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து கல்முனை தமிழ்ப் பிரதேசங்களில் இன்று அஞ்சலி நினைவுகள் நடைபெற்றன. 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 1364 பேர் உயிரிழந்திருந்தனர்.

கல்முனை சவக்காலை வீதியின் கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபிக்கு முன் பொதுமக்கள் உறவுகளை நினைத்து கண்ணீர் சிந்தி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள். ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளின் ஒப்பாரிச் சத்தத்தினாலும், கண்ணீராலும் கல்முனைப் பிரேசம் சோகமாக காட்சியளித்தது. கல்முனையில் சுனாமி அனர்த்தத்தில் 599 பேர் உயிரிழந்திருந்தனர்.

இதேபோன்று பாண்டிருப்பு சுனாமி நினைவுத்தூபிக்கு முன்பும் மக்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள். பாண்டிருப்பில் 486 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை வைத்தியாசலைக்கு ஆதம்பாவா எம்.பி. திடீர் வருகை

(பாறுக் ஷிஹான்)

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாகல்முனைஅஷ்ரஃப்ஞாபகார்த்தவைத்தியசாலையில் வியாழக்கிழமை திடீர் கள ஆய்வில் ஈடுபட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியசாலையின் பல்வேறு தேவைகள் குறைபாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். சில பிரிவுகளுக்கான இயந்திரங்கள் பழுதடைந்தமை தொடர்பில் அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. துரித கதியில் அவற்றை திருத்தியமைக்க உரிய அதிகாரிகளிடம் அவர் பேசினார்.

அத்துடன் வைத்தியசாலையின் சுற்றுச்சூழலையும் பார்வையிட்டார். வைத்தியசாலை அத்தியட்சகர் செயற்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி திட்ட வரைபுகளுடனான முன்மொழிவை நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெளிவுபடுத்தினார்

வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத்தரத் தான் ஆவன செய்வார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார். றஹ்மத் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றுக்கொண்டிருந்த குருதிக் கொடை முகாமையும் அவர் பார்வையிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர், வைத்தியசாலைக்குசிகிச்சைக்காக வந்திருந்த பொதுமக்களிடம் சிநேகபூர்வமாக உரையாடி குறைநிறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத் திணைக்களுக்கு புதிய தலைவர்கள் நேற்று நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண திணைக்களத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் புதிய தலைவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர நேற்று (வெள்ளிக்கிழமை) நியமித்து அவர்களுக்கான கடிதத்தையும் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண திணைக்களங்களில் தலைவர்களாக கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்குளேயே இந்தப் பணியிடங்கள் மாற்றியமைத்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக, நிர்வாக பிரதிப் பிரதம செயலாளராக விமலரத்னம் அவர்களை பதில் கடமைக்காக நியமித்துள்ளார்.

மேலும், முதலமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளராக என். சிவலிங்கம் அவர்களையும், மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக ஏ.எல்.எம். அஸ்மி அவர்களையும், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்கள பணிப்பாளராக என்.மணிவண்ணன் அவர்களையும், கிழக்கு மாகாண காணி ஆணையாளராக வளர்மதி ரவீந்திரன் அவர்களையும், ஐ.எம். றிக்காஸ் அவர்கள் கிழக்கு மாகாண மேலதிக கல்வி பணிப்பாளராகவும், என்.எம். நௌபீஸ் அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளராகவும், என். தனஞ்சயன் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளராகவும், ஏ.ரீ.எம். ராபீ கல்முனை மாநகர சபை ஆணையாளராகவும், எம்.ஆர். பாத்திமா ரிப்கா ஆளணி மற்றும் பயிற்சி பிரிவு பணிப்பாளராகவும், எஸ்.. பிரகாஷ் மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளராகவும், யூ. சிவராஜா மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், எஸ். வருணி மோட்டார் போக்குவரத்து ஆணையாளராகவும், வீ. தேவநேசன் மட்டக்களப்பு மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளராகவும், கே. இளம்குமுதன் கிராமிய அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.






காலைக்கதிர் Kalaikkathir

# தலைமன்னார் சிறுமி கொலை வழக்கில் சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயது சிறுமி பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 55 வயது நபரைஎதிர்வரும்ஜனவரி9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் வியாழக்கிழமைஉத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச்சென்றஇந்தநபர்கடந்த 15ஆம் திகதி திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தலைமன்னார்பொலிஸார் சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளின் பின்னர், கடந்த திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் சந்தேக நபரை வியாழக்கிழீமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில் இந்த நபர் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவ்வேளை விசாரணைகளைமேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி மாலை காணாமல் போன அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமி, தனது அம்மம்மாவின் வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள தென்னந்தோப்பில் இருந்து மறுநாள் 16ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டார்.

அதனையடுத்து, பிரேத பரிசோதனையின்போது சிறுமி பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை தெரியவந்தது.

அதன் பின்னர், வெளி மாவட்டத்தில் இருந்து சென்று குறித்த தென்னந்தோப்பில் வேலை செய்துவந்த 55 வயதுடையநபர் இக்கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் கடந்த மே மாதம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த வேளை வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்றதைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 1387 ஏக்கர் நெற் காணிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

## வவுனியாவில் ஏற்பாடு

வவுனியாவில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அந்தவகையில் கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 3529.25 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்அழிவடைந்த நெற்காணிகள் தொடர்பாக கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள காப்புறுதிச் சபையின் உத்தியோகத்தர்களால் மதீப்பீடு செய்யும் பணிகள் அண்மைய நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

மதிப்பீட்டின் அடிப்படையில்1387.5 ஏக்கர் நெற்காணிகளுக்குஇழப்பீடுவழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருஏக்கருக்கும்தலா 14,400 ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 100

# பிரபல வர்த்தக நிலையத்தினை உடைத்து மருதமுனையில் பொருள், பணம் திருட்டு

(ஷினாஸ்)

மருதமுனைபிரதானவீதியில் உள்ளபிரபலவர்த்தகநிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்களும் பணமும் களவாடப்பட்டுள்ளன என பெரியநீலாவணை பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

வியாழக்கிழமை நள்ளிரவு வேளையில் குறித்த வர்த்தக நிலையத்தின் முன்பக்கமாக உள்ள பூட்டுக்கள் உடைக்கப்பட்டு உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்கள் மற்றும் அவசர தேவைக்காக வைக்கப்பட்டிருந்தசுமார்ஐந்து லட்சம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெ.எஸ்.கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று குறித்த வர்த்தகநிலையத்திற்குவருகை தந்த அம்பாறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவு தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதோடு குற்றவியல் தடயங்கள் தொடர்பிலும் பல்வேறு தகவல்களைப் பெற்றுள்ளனர்.

அண்மைக்காலமாக மருதமுனை, பெரியநீலாவணை, கல்முனை, பாண்டிருப்பு, போன்ற பல பிரதேசங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பில் பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், பாதுகாப்பான






செயற்பாடுகளையும் முன்னெடுப்பதோடு பொலிஸாருக்கு தேவையான ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும்என்றும்பொலிஸார் பொதுமக்களைகேட்டுள்ளனர்.

# இரட்டை குழந்தைகளுக்கான கொடுப்பனவு வழங்கி வைப்பு

(-நவாஸ்)

ஒரே குழந்தைப் பேறில் மூன்றுகுழந்தைகளைப்பெற்ற குடும்பத்திற்கு இரட்டைப் பிள்ளைகள் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டது.

அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள்திணைக்களத்தினால் ரூபாய் 15000- பெறுமதியான காசோலை பதில் உதவி பிரதேச செயலாளர் நசீலினால்வழங்கி வைக்கப்பட்டது.

ஒரே சூலில் இரட்டைக் குழந்தைகளைப் பெறும் குடும்பத்தினருக்கு அரசு நிதி உதவிவழங்கிவருகின்றது. அந்த வகையில் அண்மையில் ஒரே சூலில் மூன்று பிள்ளைகளைப் பெற்ற குடும்பத்திற்கு இந்த நிதி உதவி வழங்கப்பட்டது.



# தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு வவுனியாவில் காணி இல்லை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிராகரிப்பு

தேசியபுலனாய்வுபிரிவிற்கு வவுனியா நகரப் பகுதியில் அலுவலகம் அமைப்பதற்கான காணிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

காணியற்ற அரச திணைக்களங்கள், தேசிய புலனாய்வு அலுவலகம் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியன தமக்கு நகரப் பகுதியில் காணி ஒதுக்கித் தருமாறு வவுனியா பிரதேச செயலகத்திடம் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்திருந்தன.

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் ஆகியவற்றை பிரித்து வழங்குவது தொடர்பாக கடந்த மாசி மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஆராயப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் தேசிய புலனாய்வு அலுவலகத்தின் காணிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக நேற்று பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில்தெரிவிக்கப்பட்டது.

(100)

# வவுனியா மாவட்டமும் வடக்கின் ஒரு பகுதியே மாகாண அதிகாரிகள் உணர்ந்து சேவையாற்றுக

## அந்த மாவட்ட எம்.பி. திலகநாதன் வலியுறுத்து



வடக்கு மாகாணத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் வவுனியாவும் வடக்கு மாகாணம் என்று உணர்ந்து கடமையாற்ற வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில்இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சூடுவெந்தபுலவு பகுதியில் உள்ள பாடசாலையில் தகவல் தொடர்பாடல் பாடம் கற்பித்த ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு புதியஆசிரியர்நியமிக்கப்பட்டு 6 மாதம் கடந்தும் அவர் அங்கு செல்லவில்லை. இதனால் அந்த மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்து நாகரிக பாடத்திற்கு ஆசிரியர் இல்லை. ஏன் அந்த வெற்றிடம் நிரப்பப்படவில்லை. வவுனியா தெற்கு வயலயத்தில் 23 கணித ஆசிரியர்கள் பற்றாக்குறை. யாழ்ப்பாண மாவட்டத்தில் 87 கணித ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர்.

வடமாகாணத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் வடக்கு மாகாணம் என்றால் யாழ்மாவட்டம் மட்டும்தான் என்றா நினைக்கிறார்கள். வவுனியாவும் வடக்கு மாகாணம் தான். இனிமேல் இவ்வாறான கூட்டங்களுக்கும் மாகாணப் பணிப்பாளர்களையும்அழைக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு இது விளக்கும்.

பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்தால் விவரத்துடன் தாருங்கள். நாம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுடன் கதைக்கின்றோம். கிராமப்புற பாடசாலைகளில் சில மாணவர்கள் கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சை எழுத முடியாத நிலையில் உள்ளனர். அடிப்ஜுடைக் கல்வி கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

தூர இடங்களில் இருந்தும் வரும் ஆசிரியர்கள் ஒரு பஸ் மாறி வரும் அளவுக்கு தான் இடமாற்றங்களை வழங்குங்கள். சில ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு பஸ்களில் சென்றே கற்பிக்கின்றார்கள். பஸ் தாமதமாக சென்றால் கைவிரல் அடையாளம் வைக்கும் போது தாமத வருகையாக அது பதிவாகிறது. இதனால் காலையியலேயே அந்த ஆசிரியர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டால் எவ்வாறு சிறந்த கல்வியை வழங்க முடியும்.

ஆகவே தூர இடங்களுக்கு பஸ்ஸில் சென்று கற்பிக்கும் ஆசிரியர்களின் தாமத வருகையை கணக்கில் எடுக்காத வகையில் மாற்று ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

100

# களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தையில் பிளாஸ்டிக் கழிவு சேகரிக்க கூடாரம்






(பாறுக் ஷிஹான்)

'கிளீன் ஸ்ரீலங்கா -2025' ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக பெரண்டினா நிறுவனம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையும் இணைந்து நேற்று (வெள்ளிக்கிழமை) களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தையில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கும் இருப்புகூடாரம்ஒன்றைபொதுமக்கள் பாவனைக்காக வைத்துள்ளது.

இந்நிகழ்வுக்கு பெரண்டினா ஊழியர்கள் பிரதேச சபை ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2024இல் வெளியிடப்பெற்றது